அணைக்கட்டுத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் செயலாக்கத்தை எதிர்த்து பாதிக்கப்பட்ட சிலர் வழக்கு தொடுத்திருக்கிற காரணத்தால் அந்த வேலையும் அப்படியே நிற்கிறது. வாழமலையார் அணைக்கட்டுத் திட்டத்திற்கான மதிப்பீட்டை தயாரித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 அணைத் திட்டத்தில் உள்ளார் அணைத் திட்டம் ஒரு முக்கியமான பெரிய திட்டம். சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி ஏற்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயார்செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரடியாக அங்கே வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டம் குறித்து ஓர் ஆய்வு நடத்த வேண்டும். ஆய்வு செய்வதற்கே வனத் துறையினர் பொதுப் பணித் துறையினரை வனத்திற்கு உள்ளே விடமாட்டேன் என்கிறார்கள். அப்படி போவதானால் ஏற்படும் இழப்புக்கு பொதுப் பணித் துறை நட்டஈடு தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவேதான், பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளர் இதை அரசே வனத் துறையிடம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எனவே அரசும் வனத் துறையிடம் கேட்டிருக்கிறது. ஆய்வு நடத்துவதற்கு உள்ளே செல்ல அனுமதியுங்கள் என்று கேட்டிருக்கிறோம். பொதுவாகவே அணைக்கட்டுவதில் இருக்கிற மிகப் பெரிய சிரமமே நிதி என்று கூட சொல்லமாட்டேன், வனத் துறையுடன் போராடுகிற அந்தப் போராட்டம்தான் மிகப் பெரிய போராட்டமாக இருக்கிறது. இந்தச் சட்டத் திட்டங்களை மாற்றியமைத்தால் ஒழிய பெரிய அணைத் திட்டங்களைக் கொண்டு வருவது மிகக் கடினமாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். இருந்தாலும் வனத் துறையின் அனுமதியைப் பெற்று இன்றைக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். காரணம் இந்தத் திட்டம் சாதகமான ஒரு திட்டம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது.

துணை மின் நிலையம் அமைத்தல்.

*8294—திரு. எம். சீரங்கன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1992-93 ஆம் ஆண்டில் கொளத்தூரில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையமும் ஒரு 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய முடிவிற்கு நன்றி. அதோடு அங்கே அந்தத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் நிலையத்திற்கு இன்னும் நிலம் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதோடு மத்திய அரசினுடைய மின் துறையினுடைய அனுமதியும் எதிர்பார்க்கப்படுகிறது. அது, கிடைத்ததும், அதைத்தான் குறிப்பிட்டேன். 1992-93-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே, அப்பகுதியில் முழுவதும் விவசாயம் செய்யும்படியான கிட்டத்தட்ட 300க்கு மேற்பட்ட விவசாயிகளுடைய பம்ப் செட்டுகள் ஓடுகின்றன. அங்கே சீராக மின் ஓட்டம் இல்லாததால் திடீரென்று மோட்டார்கள் பழுதடைந்து, விவசாயம் நசிந்து போகும் நிலைமை தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிக்கிறது. அங்கு பயிரிடப்படும்படியான மிளகாய் போன்ற பயிர்கள் சரியான காலங்களில் விளைச்சல் இல்லாமல் நாசமாகும்படியான நிலைமை வளர்ந்து வருவதால், அந்தக் காலத்தை குறுக்கி, விரைவில் அந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அதற்குரிய துரித நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கும் நிலைமையை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவேதான், இந்த மின் துணை நிலையத்தை அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

கிளை மின் நிலையப் பணி.

*9333—திரு. எ. ஏகாம்பர ரெட்டி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;